**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 27.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 8081/E/2018**

திரு J.பிலோமின் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு,
திருச்சி மாவட்டம் - 620 002. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 14.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 10.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 27.10.2018 |

******

**ஆணை**

இன்று (27.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு J.பிலோமின் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு எஸ்.சுரேஷ், வட்டத் துணை ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கிழக்கு, திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 14.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி

வட்டம், நெ.318, சர்வே எண்.8,19,1/1 மற்றும் ½ நெ.319, சர்வே எண்.1 ஆகியவற்றிற்கு பூரா இனாம் செங்குளம் முனிசிபாலிடிக்கு வெளியில் கிராமத்திய (Survey and Settlement Register of the entire Inam village of Sengulam No.318,319 outside Municipality, Tiruchirappalli Taluk, Tiruchirappalli District) செட்டில்மெண்ட் பைசலாதி ரிஜிஸ்டர் நகல், நெ.87, செங்குளம் கிராமத்தில் 1959-ம் வருடத்தில் நடைபெற்ற செட்டில்மெண்ட் புல எண்.1, விஸ்தீர்ணம் ஏக்கர் 3.48 செண்ட், புல எண்.2, விஸ்தீர்ணம் ஏக்கர் 5.08 செண்டு நிலங்களுக்குரிய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் நகல், 10(1) சிட்டா (கணக்கு) நகல் புலப்பட நகல் மற்றும் இந்த நிலங்களுக்குரிய நான்கெல்லை விவரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், நெ.87, செங்குளம் கிராமத்திற்கு 1962-ம் வருடத்திய செட்டில்மெண்ட் படி பட்டா எண்.1-க்குரிய 9(2) அறிவிக்கையின் நகலை இத்துடன் இணைத்துள்ளதாகவும், 9(2) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.1/1 விஸ்தீர்ணம் 0.13 செண்ட் மற்றும் ½ விஸ்தீர்ணம் ஏக்கர் 2.80 செண்ட் பரப்பளவுக்குரிய புலப்பட நகல், 10(1) சிட்டா (கணக்கு) நகல், செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் நகல் என 8 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், டவுன்ஹால், திருச்சிராப்பள்ளி மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 24.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 10.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வருவாய் வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், டவுன்ஹால், திருச்சிராப்பள்ளி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 27.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (27.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு ஏற்கெனவே 24.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகத் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மீண்டும் 26.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக உரிய தகவல் மேல்முறையீட்டாளருக்கு வழங்கத் தயாராகக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்து, இன்றைய விசாரணையின்போது மேல்முறையீட்டாளருக்கு நேரில் சார்வு செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலை பரிசீலனை செய்கையில், இனம் 7 மற்றும் 8-ற்குரிய தகவல் முழுமையாக

வழங்கப்பட்டுள்ளதும், மீதமுள்ள இனம் 1 முதல் 6-ற்குரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்பதும் தெரிய வருகிறது. இதுகுறித்து இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவிய போது, மேற்படி தகவலை 30 தினங்களில் வழங்குவதாக எழுத்துமூலமாகத் தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது.

**மேல்முறையீட்டாளர் 14.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல்களில் விடுப்பட்ட இனங்களான 1 முதல் 6 இனங்களுக்குரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 8081/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கிழக்கு,
திருச்சி மாவட்டம் - 620 002.

**<u>மனுதாரர்</u>**

திரு J.பிலோமின்,
த/பெ. ஜோசப்,
பிளாட் எண்.47, க.எண்.10,
ராஜாராம் சாலை,
கே.கே.நகர் அஞ்சல்,
திருச்சி மாவட்டம் - 620 021.

Copy to: Judgement File.
*"VP / PA -03.10.19"*